**5. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் யாது?**

அ) கொள்ளையடித்தல் ஆ) ஆநிரை மேய்த்தல்
இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல் ஈ) வேளாண்மை

**[விடை: இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல்]**



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0



## II. கூற்றை வாசிக்கவும், சரியான விடையயை (✓) செய்யவும்

**6.** **கூற்று : புலவர்களின் குழுமம் சங்கம் என அறியப்பட்டது.**
**காரணம் : சங்க இலக்கியங்களின் மொழி தமிழாகும்.**

அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி; காரணம் தவறு.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**[விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல]**

**7.** **கீழ்காணும் கூற்றுகளில் எவை உண்மையானவை அல்ல?**

1. கரிகாலன் தலையாலங்கானம் போரில் வெற்றி பெற்றான்.
2. பதிற்றுப்பத்து சேர அரசர்கள் பற்றிய விவரங்களை வழங்குகின்றன.
3. சங்க காலத்தைச் சேர்ந்த பழைமையான இலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடையில் எழுதப்பட்டன.

அ) '1' மட்டும் ஆ) '1' மற்றும் '3' மட்டும்
இ) '2' மட்டும் **[விடை: ஆ) '1' மற்றும் '3' மட்டும்]**

**8.** **பண்டைக்காலத் தமிழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் ஏறுவரிசையில் இவ்வாறு அமைந்திருந்தது**

அ) ஊர் < நாடு < கூற்றம் < மண்டலம்
ஆ) ஊர் < கூற்றம் < நாடு < மண்டலம்
இ) ஊர் < மண்டலம் < கூற்றம் < நாடு
ஈ) நாடு < கூற்றம் < மண்டலம் < ஊர் **[விடை: ஆ) ஊர் < கூற்றம் < நாடு < மண்டலம்]**

**9.** **அரசவம்சங்களையும் அரச முத்திரைகளையும் பொருத்துக.**

அ) சேரர் - 1. மீன்
ஆ) சோழர் - 2. புலி
இ) பாண்டியர் - 3. வில், அம்பு

அ) 3, 2, 1 ஆ) 1, 2, 3 இ) 3, 1, 2 ஈ) 2, 1, 3

**[விடை: அ) 3, 2, 1]**

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1.** வெண்ணி போரில் வெற்றி பெற்றது ______________. **[விடை: கரிகாலன்]**
**2.** சங்க காலத்து மிகப்பழமையான தமிழ் இலக்கண நூல் __________. **[விடை: தொல்காப்பியம்]**
**3.** காவிரியாற்றின் குறுக்கே கல்லணையை ______________ கட்டினார். **[விடை: கரிகாலன்]**
**4.** படைத் தலைவர் ____________ என அழைக்கப்பட்டார். **[விடை: தானைத் தலைவன்]**
**5.** நில வரி ____________ என அழைக்கப்பட்டது. **[விடை: இறை]**

## IV. சரியா/ தவறா.

**1.** சங்க காலத்தில் பாடல்களைப் பாடுவோர் இருளர் என அழைக்கப்பட்டனர். **[விடை: தவறு]**
**2.** சாதிமுறை சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றது. **[விடை: தவறு]**
**3.** கிழார் என்பவர் கிராமத்தின் தலைவர் ஆவார். **[விடை: சரி]**
**4.** புகார் என்பது நகரங்களின் பொதுவான பெயர் ஆகும். **[விடை: தவறு]**
**5.** கடற்கரைப் பகுதிகள் மருதம் என அழைக்கப்பட்டன. **[விடை: தவறு]**

## V. பொருத்துக.

அ. தென்னர் - 1. சேரர்
ஆ. வானவர் - 2. சோழர்
இ. சென்னி - 3. வேளிர்
ஈ. அதியமான் - 4. பாண்டியர் **[விடை: அ-4, ஆ-1, இ-2, ஈ-3]**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



## VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. பண்டைக்காலத் தமிழகத்தின் வரலாற்றை மறுகட்டுமானம் செய்ய உதவும் இரு இலக்கியச் சான்றுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விடை. 1. தொல்காப்பியம் 2. எட்டுத்தொகை
3. பட்டினப்பாலை 4. பதினெண்கீழ்க்கணக்கு

**2. நடுகல் அல்லது வீரக்கல் என்றால் என்ன?**

விடை. பண்டைக்காலத் தமிழர்கள் போர்க்களத்தில் மரணமுற்ற வீரர்கள் மேல் பெரும் மரியாதை கொண்டிருந்தனர். போரில் மரணமடைந்த வீரரின் நினைவைப் போற்றுவதற்காக கற்கள் நடப்பட்டன. இக்கற்கள் நடுகல் அல்லது வீரக்கல் எனப்பட்டன.

**3. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து திணைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விடை. 1. குறிஞ்சி 2. முல்லை
3. மருதம் 4. நெய்தல் 5. பாலை.

**4. சங்க காலத்தோடு தொடர்புடைய இரு தொல்லியல் ஆய்விடங்களைக் குறிப்பிடுக.**

விடை. 1. ஆதிச்சநல்லூர், 2. உறையூர்

**5. கடையெழு வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விடை. 1. பாரி 2. காரி
3. ஓரி 4. பேகன்
5. ஆய் 6. அதியமான்
7. நள்ளி

**6. களப்பிரர் காலத்தைச் சேர்ந்த ஏதேனும் மூன்று தமிழ் இலக்கியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விடை. 1. பெரியபுராணம்
2. சீவகசிந்தாமணி
3. குண்டலகேசி

## VII. கீழ்க்காண்பதற்கு விடையளிக்கவும்.

**1. சங்க காலத்தில் பெண்களின் நிலை குறித்து விவாதிக்கவும்.**

விடை. **சங்ககாலத்தில் பெண்களின் நிலை :**

1. சமூக வாழ்வில் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. கற்றறிந்த அறிவுக்கூர்மையுடைய பெண்கள் இருந்தனர்.
2. நாற்பது பெண்புலவர்கள் வாழ்ந்து அரியநூல்களை கொடுத்துச் சென்றுள்ளனர்.
3. திருமணம் சொந்த விருப்பத்தை சார்ந்து அமைந்திருந்தது.
4. கற்பு பெண்களின் மிகச் சிறந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டது.
5. பெற்றோரின் சொத்துக்களில் மகனும், மகளும் சமமான பங்கைப் பெற்றிருந்தனர்.

## VIII. உயர் சிந்தனை வினாக்கள் :

**1. கரிகால் வளவன் மிகச் சிறந்த சோழ அரசனாகக் கருதப்படுகிறான்: நிறுவுக.**

விடை.
1. சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் கரிகால் வளவன் அல்லது கரிகாலன் ஆவார்.
2. அவர் தன்னை எதிர்த்த சேரர், பாண்டியர் மற்றும் அவர்களை ஆதரித்த பதினொன்று வேளிர் தலைவர்களின் கூட்டுப்படையைத் தஞ்சாவூர் பகுதியில் உள்ள வெண்ணி என்னும் சிற்றூரில் தோற்கடித்தார்.
3. அவர் காடுகளை விளைநிலங்களாக மாற்றினார்.
4. வேளாண்மையை மேம்படுத்துவதற்காகக் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.
5. பட்டினப்பாலை எனும் பதினெண்கீழ்க்கணக்கைச் சேர்ந்த நூல், கரிகாலனின் ஆட்சியின்போது அங்கு நடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0




**2. களப்பிரர்களின் காலம் இருண்டகாலம் அல்ல. காரணங்கள் தருக.**

**விடை.**
1. களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.
2. அவர்கள் விட்டுச்சென்ற நினைவுச் சின்னங்கள், தொல்கலைப் பொருட்கள் என எதுவுமில்லை.
3. ஆனால் அவர்களின் ஆட்சி குறித்து இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.
4. இலக்கியச் சான்றுகள், தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், பெரியபுராணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
5. சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகிய இரண்டும் இக்காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.
6. தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்றகாலம் அது.
7. சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து என்னும் புதிய எழுத்துமுறை உருவானது.
8. பதினெண் கீழ்கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன.
9. இக்காலத்தில் வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின.
10. எனவே களப்பிரர் காலம் பொதுவாக சித்தரிக்கப்பட்டதைப் போன்று இருண்டகாலம் அல்ல.

## IX. வரைபடப் பயிற்சி

**1. தென்னிந்திய ஆறுகள் வரைபடத்தில் சேர, சோழ, பாண்டிய அரசுகளின் எல்லைகளைக் குறித்து, வர்ணம் தீட்டவும்.**


**விடை.**




**2. கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**

அ. கொற்கை  ஆ. காவிரிப்பூம்பட்டினம்  இ. முசிறி  ஈ. உறையூர்  உ. மதுரை

**விடை.**




enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



# அலகு 1

# ஆசியா மற்றும் ஐரோப்பா

## கற்றல் நோக்கங்கள்

- ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களின் அமைவிடம், பரவல் மற்றும் அரசியல் பிரிவுகளைப் புரிந்து கொள்ளுதல்.
- இவ்விரண்டு கண்டங்களின் நிலத்தோற்றங்கள் மற்றும் ஆறுகளைப் பற்றி அறிதல்.
- இக்கண்டங்களின் காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்களைப் பற்றி புரிந்து கொள்ளல்.
- பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வளங்களைப் பற்றி கலந்துரையாடுதல்.
- இக்கண்டங்களில் காணப்படும் கலாச்சார கூறுகளைப் பாராட்டுதல்.
- கொடுக்கப்பட்ட இடங்களை வரைபடத்தில் குறிக்கும் திறனைப் பெறுதல்..



## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆசியாவின் மேற்கு எல்லையில் இல்லாதது எது?**

அ) கருங்கடல் ஆ) மத்திய தரைக்கடல்
இ) செங்கடல் ஈ) அரபிக்கடல் **[விடை : ஈ) அரபிக்கடல்]**

**2. எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இடையில் அமைந்துள்ள மலையிடைப் பீடபூமி**

அ) திபெத் ஆ) ஈரான்
இ) தக்காணம் ஈ) யுனான் **[விடை: ஆ) ஈரான்]**

**3. நிலநடுக்கோட்டுக் காலநிலை என்பது**

**i) ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும்.**
**ii) சராசரி மழையளவு 200மி.மீ ஆகும்.**
**iii) சராசரி வெப்பநிலை 10°C ஆகும்.**
**மேற்கண்ட கூற்றுகளில்**

அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி
இ) (i) மற்றும் (iii) சரி ஈ) (i) மற்றும் (ii) சரி **[விடை: அ) i மட்டும் சரி]**

**4. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. மலேசியா | 1. அத்தி |
| B. தாய்லாந்து | 2. ரப்பர் |
| C. கொரியா | 3. தேக்கு |
| D. இஸ்ரேல் | 4. செர்ரி |



enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0



குறியீடுகள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

**[விடை: அ) 2, 3, 4, 1]**

5. **இந்தியா _________ உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது.**
அ) துத்தநாகம் ஆ) மைக்கா
இ) மாங்கனீசு ஈ) நிலக்கரி **[விடை: ஆ) மைக்கா]**

6. **ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ்க்கு இடையில் இயற்கையாகவே அமைந்துள்ள எல்லை**
அ) ஆல்ப்ஸ் ஆ) பைரனீஸ்
இ) கார்பேதியன் ஈ) காகசஸ் **[விடை: ஆ) பைரனீஸ்]**

7. **'ஐரோப்பாவின் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதியில் மிதமான மற்றும் ஈரப்பதமான காலநிலை நிலவுகிறது'. சரியான தெரிவினைத் தேர்வு செய்க.**
அ) இந்தப் பகுதிகள் நிலநடுக்கோட்டிற்கு அருகில் அமைந்துள்ளது.
ஆ) இப்பகுதிகள் வட அட்லாண்டிக் வெப்ப நீரோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றன.
இ) இப்பகுதிகளைச் சுற்றி மலைகள் காணப்படுகின்றன.
ஈ) மேற்கண்ட அனைத்தும் சரி.
**[விடை: ஆ) இப்பகுதிகள் வட அட்லாண்டிக் வெப்ப நீரோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றன]**

8. **கீழ்கண்டவற்றுள் தவறான கூற்று எது?**
அ) ஐரோப்பா மின்சக்தியை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது.
ஆ) ஐரோப்பாவின் அனைத்து ஆறுகளும் ஆல்ப்ஸ் மலையில் உற்பத்தியாகின்றன.
இ) ஐரோப்பாவின் பெரும்பாலான ஆறுகள் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன.
ஈ) ஐரோப்பாவின் ஆறுகள் வற்றாத ஆறுகளாகும்.
**[விடை: ஈ) ஐரோப்பாவின் ஆறுகள் வற்றாத ஆறுகளாகும்]**

9. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) மெஸடா – ஸ்பெயின்
ஆ) ஜுரா – பிரான்ஸ்
இ) பென்னின்ஸ் – இத்தாலி
ஈ) கருங்காடுகள் – ஜெர்மனி **[விடை: இ) பென்னின்ஸ்-இத்தாலி]**

10. **ஐரோப்பாவில் மிகக் குறைவான மக்களடர்த்தியைக் கொண்ட நாடு எது?**
அ) ஐஸ்லாந்து ஆ) நெதர்லாந்து
இ) போலந்து ஈ) சுவிட்சர்லாந்து **[விடை: அ) ஐஸ்லாந்து]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தாரஸ் மற்றும் போன்டைன் மலைத்தொடர்கள் ____________ முடிச்சிலிருந்து பிரிக்கின்றது. **[விடை: ஆர்மீனியன்]**
2. உலகின் மிக ஈரப்பதமான இடம் ____________. **[விடை: மௌசின்ராம்]**
3. உலகிலேயே ______ உற்பத்தியில் ஈரான் முன்னிலையில் உள்ளது. **[விடை: பேரீச்சம் பழங்கள்]**
4. ஐரோப்பாவையும், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவையும் இணைக்கும் கடல்வழி ____________. **[விடை: நன்னம்பிக்கை முனைவழி]**
5. பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய நடனம் ____________ . **[விடை: டினிக்லிங்]**
6. ஐரோப்பாவின் இரண்டாவது உயரமான சிகரம்________ **[விடை: மாண்ட் பிளாங்க் (4,807மீ)]**
7. ஐரோப்பாவின் மத்திய மற்றும் கிழக்கு பகுதியில் நிலவும் காலநிலை ____________. **[விடை: கண்டகாலநிலை]**
8. வடகடலில் உள்ள முக்கிய மீன்பிடித்தளம் ____________. **[விடை: டாகர் பாங்க்ஸ்]**
9. ஐரோப்பாவின் மக்களடர்த்தி ______. **[விடை: 1 சதுர கிலோ மீட்டருக்கு 34 நபர்கள் ஆகும்]**
10. ______ஆறு ஐரோப்பாவில் உள்ள ஒன்பது நாடுகளைக் கடந்து செல்கின்றது. **[விடை: டான்யூப்]**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மெசபடோமியா சமவெளி | - | அ. அதிக மழை |
| 2. | மௌசின்ராம் | - | ஆ. நார்வே |
| 3. | அரிசிக் கிண்ணம் | - | இ. ஸ்பெயின் |
| 4. | ஃபியார்டு கடற்கரை | - | ஈ. யூப்ரடீஸ் & டைக்ரீஸ் |
| 5. | எருதுச் சண்டை | - | உ. தாய்லாந்து |

**[விடை: 1-ஈ, 2-அ, 3-உ, 4-ஆ, 5-இ]**

**IV. மேலும் கற்கலாம்**

**1.** **கூற்று (A) : இத்தாலி, வறண்ட கோடை காலத்தையும், குளிர்கால மழையையும் பெற்றுள்ளது.**
**காரணம் (R) : இது மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ளது.**

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் ஆகும்.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
இ) (A) சரி. ஆனால் (R) தவறு.
ஈ) (A) தவறு. ஆனால் (R) சரி.

**[விடை: அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் ஆகும்]**

**2.** **கொடுக்கப்பட்ட ஆசியா வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள 1, 2, 3 மற்றும் 4 என்பன கீழ்க்கண்ட சமவெளிகளைக் குறிக்கின்றன.**




**ஆசியா**

A. சிந்து – கங்கை சமவெளி  B. மஞ்சூரியன் சமவெளி
C. மெசபடோமியா சமவெளி  D. சீனச் சமவெளி

**வரைபடத்தில் உள்ள எண்ணுடன் சமவெளிகளைப் பொருத்தி, பின் கீழே கொடுக்கப்பட்ட குறியீட்டைப் பயன்படுத்தி சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.**

**குறியீடுகள்**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 1 | 4 | 3 |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

**[விடை: ஆ) 2, 1, 3, 4]**

**3.** **கொடுக்கப்பட்டுள்ள ஆசியா வரைபடத்தில் நிழலிடப்பட்ட பகுதியில் விளையும் பயிர்வகை**



**ஆசியா**

அ) கரும்பு
ஆ) பேரீச்சம் பழம்
இ) ரப்பர்
ஈ) சணல்

**[விடை]**




**ஆசியா**

**[விடை: ஆ) பேரீச்சம் பழம்]**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0



V. **சுருக்கமாக விடையளி.**

**1. ஆசியாவில் உள்ள முக்கிய மலையிடைப் பீடபூமிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விடை. **ஆசியாவின் உள்ள முக்கிய மலையிடைப் பீடபூமிகள் :**

1. அனடோலிய பீடபூமி (போன்டைன் – டாரஸ் மலை)
2. ஈரான் பீடபூமி (எல்பர்ஸ் – ஜாக்ரோஸ்)
3. திபெத்திய பீடபூமி (குன்லுன் – இமயமலை)

**2. 'மான்சூன் காலநிலை' பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

விடை. மான்சூன் காலநிலை என்பது கோடைக்காலத்தில் அதிக வெப்பமும், ஈரப்பதத்துடனும், குளிர்காலம் வறண்டும் காணப்படும்.

(எ.கா.) தெற்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகள்.

**3. நிலத்தோற்றங்கள் ஆசியாவின் மக்கள் தொகை பரவலை எவ்வாறு பாதிக்கின்றது?**

விடை.
1. பல்வேறுபட்ட இயற்கை கூறுகளினால் ஆசியாவின் மக்கட்பரவல் சீரற்றுக் காணப்படுகிறது.
2. ஆசியாவின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் மூன்று பங்கு மக்கள் சீனா மற்றும் இந்தியாவில் வசிக்கின்றனர்.
3. ஆசியாவின் ஆற்றுச் சமவெளிகள் மற்றும் தொழிற்பகுதிகள் அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ளன. ஆசியாவின் உட்பகுதிகளில் மக்கள் அடர்த்தி மிகக் குறைந்து காணப்படுகின்றது.

**4. ஆசியாவில் காணப்படும் முக்கிய துறைமுகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விடை. **ஆசியாவில் காணப்படும் முக்கிய துறைமுகங்கள்:**

1. டோக்கியோ 2. ஷங்காய்
3. சிங்கப்பூர் 4. ஹாங்காங்
5. சென்னை 6. மும்பை
7. கராச்சி மற்றும் 8. துபாய்

**5. 'வேறுபாடுகளின் நிலம் ஆசியா' - நிரூபி.**

விடை.
1. உலகின் மிகப்பெரிய கண்டம் ஆசியா.
2. இங்கு பல்வேறுபட்ட நிலத்தோற்றங்கள், பலவகை காலநிலைகள், பலவகை இனங்கள், மொழிகள், சமயங்கள் மற்றும் கலாச்சாரங்களைப் பின்பற்றும் பல மக்கள் வாழும் இடமாகத் திகழ்வதால் ஆசியா கண்டம் 'வேறுபாடுகளின் நிலம்' என்று அழைக்கப்படுகின்றது.

**6. ஆல்பைன் மலைத்தொடரில் உள்ள முக்கிய மலைகள் யாவை?**

விடை. **ஆல்பைன் மலைத்தொடரில் உள்ள முக்கிய மலைகள் :**

1. சியாரா நெவேடா 2. பைரினீஸ்
3. ஆல்ப்ஸ் 4. அப்னின்ஸ்
5. டினாரிக் ஆல்ப்ஸ் 6. காகசஸ் மற்றும்
7. கார்பேதியன் மலைத்தொடர்கள் ஆகும்.

**7. ஐரோப்பாவின் முக்கிய ஆறுகள் யாவை?**

விடை. **ஐரோப்பாவின் முக்கிய ஆறுகள் :**

1. வோல்கா 2. டான்யூப் 3. நீப்பர் 4. ரைன்
5. ரோன் 6. போ 7. தேம்ஸ்

**8. ஐரோப்பாவில் மத்திய தரைக்கடல் காலநிலையைக் கொண்ட நாடுகளின் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

விடை. ஸ்பெயின், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் மத்திய தரைகடல் காலநிலையைக் கொண்ட நாடுகளாகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



# பாடப்பகுதி உள்வினாக்கள்

## சிந்தனை வினா

**1. கைபர் கணவாய் சுலைமான் மலைத்தொடரிலும், போலன் கணவாய் டோபா காகர் மலைத்தொடரிலும் அமைந்துள்ளன. இவ்விரு கணவாய்களின் முக்கியத்துவம் என்ன?**

**கைபர் கணவாய்**

**விடை.** 1. கைபர் கணவாய் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளை இணைக்கும் ஒரு மலை வழிக் கணவாய் ஆகும். இது உலகின் பழமையான சாலைகளில் ஒன்றாகும்.

2. மத்திய ஆசியா மற்றும் தெற்கு ஆசியாவுக்கு மத்தியில் கைபர் கணவாய் ஒரு முக்கியமான வர்த்தக பாதையாக பயன்படுத்தப்பட்டது. இந்த இடம் ஒரு முக்கியமான இராணுவத் தளமாகவும் திகழ்ந்து வருகிறது.

**போலன் கணவாய்**

போலன் கணவாய் பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் பகுதியில் உள்ள ஒரு மலைக்கணவாய் ஆகும். இது பாகிஸ்தானின் பலுச்சிஸ்த்தானையும் ஆப்கானின் காந்தகாரையும் இணைக்கிறது. இது ஆப்கன் எல்லையில் இருந்து 120 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. தெற்காசியாவிற்குள் நுழைவதற்கு இதுவும் கைபர் கணவாயும் தான் வழியாகும்.

**2. நிலநடுக்கோட்டுப் பகுதியில் குளிர்காலம் காணப்படுவதில்லை ஏன்?**

**விடை.** நிலநடுக்கோட்டுப் பகுதியில் சூரியனின் வெப்பக் கதிர்கள் நேர் கதிர்களாக விழுகின்றன. எனவே நிலநடுக்கோட்டுப் பகுதியில் குளிர்காலம் காணப்படுவதில்லை.

**3. ஆசியாவில் உள்ள சில நாடுகள் மட்டும் மிக அதிக மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. காரணம் தருக.**

**விடை.** உலகிலேயே மிக அதிக மக்கள் தொகை கொண்ட கண்டம் ஆசியாவாகும். உலகில் சுமார் பத்தில் ஆறு பங்கு மக்கள் தொகை ஆசியாவில் காணப்படுகிறது. பல்வேறுபட்ட இயற்கை கூறுகளினால் ஆசியாவின் மக்கட்பரவல் சீரற்றுக் காணப்படுகின்றது. ஆசியாவின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் மூன்று பங்கு மக்கள் சீனா மற்றும் இந்தியாவில் வசிக்கின்றனர். இவ்விரு நாடுகள் மட்டுமின்றி, வங்காளதேசம், இந்தோனசியா, ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் மக்கள்தொகை 100 மில்லியனுக்கு அதிகமாக உள்ளது. ஆசியாவின் மக்கள் அடர்த்தியின் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 143 நபர்கள் ஆகும். இந்தியா, ஜப்பான், வங்காளதேசம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் மிக அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ளன. குறிப்பாக, ஆற்றுச் சமவெளிகள் மற்றும் தொழிற்பகுதிகள் அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ளன. ஆசியாவின் உட்பகுதிகளில் மக்கள் அடர்த்தி மிகக் குறைந்து காணப்படுகின்றது.

**4. ஐரோப்பா கண்டம் 'தீபகற்பங்களின் தீபகற்பம்'' என அழைக்கப்படுவது ஏன்?**

**விடை.** ஐரோப்பா கண்டம் யுரேசியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது புவியியல் அமைப்பின்படி ஒரு தீபகற்பமாகும். இதன் எல்லைகளாக வடக்கே ஆர்க்டிக் பெருங்கடலும் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும் தெற்கே மத்திய தரைக்கடலும் கிழக்கே கருங்கடலும் உள்ளன. எனவே ஐரோப்பா கண்டம் 'தீபகற்பங்களின் தீபகற்பம்' என அழைக்கப்படுகிறது.

**5. ஐரோப்பிய ஆறுகள் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்கு உகந்ததாக உள்ளன. ஏன்?**

**விடை.** ஐரோப்பாவின் வளர்ச்சியில் அதன் ஆறுகள் மிகப்பெரும் பங்காற்றுகின்றன. இவ்வாறுகள் வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியினையும், மின்சாரம் தயாரிக்கவும் பயன்படுகின்றன. பெரும்பான்மையான ஆறுகள் ஆல்ப்ஸ் மலைகள் மற்றும் மத்திய பீடபூமி ஆகியவற்றில் உருவாகின்றன. மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் உள்நாட்டு நீர்ப்போக்குவரத்திற்கு இவ்வாறுகள் பெரிதும் உதவுகின்றன.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஆசியாவில் _________ நாடுகள் உள்ளன.**

அ) 48 ஆ) 38
இ) 58 ஈ) 28 **[விடை: அ) 48]**

**2. ஆசியாவின் உயர்ந்த சிகரம் _________ ஆகும்.**

அ) காட்வின் ஆஸ்டின் ஆ) எவரெஸ்ட் சிகரம்
இ) கஞ்சன்ஜங்கா ஈ) நீலகிரி **[விடை: ஆ) எவரெஸ்ட் சிகரம்]**

**3. உலகின் தாழ்வான பகுதி ஆசியாவிலுள்ள _________ உள்ளது.**

அ) சாக்கடல் ஆ) மத்திய தரைகடல்
இ) காஸ்பியன் கடல் ஈ) வடகடல் **[விடை: அ) சாக்கடல்]**

**4. _________ உலகின் கூரை என்று அழைக்கப்படுகின்றது.**

அ) நேபாளம் ஆ) சீனா
இ) திபெத் ஈ) இந்தியா **[விடை: இ) திபெத்]**

**5. _________ மிகப்பெரிய தீவுக்கூட்டம் ஆகும்.**

அ) சிங்கப்பூர் ஆ) இந்தோனேசியா
இ) மலேசியா ஈ) ஜப்பான் **[விடை: ஆ) இந்தோனேசியா]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஆசியாவின் பெரும்பாலான நிலப்பரப்பு _________ பரவியுள்ளது. **[விடை: வட அரைக்கோளத்தில்]**
2. _________ ஆசியாவை வடஅமெரிக்காவிடம் இருந்து பிரிக்கின்றது. **[விடை: பேரிங் நீர்ச்சந்தி]**
3. ஆசியாவின் மிக நீளமான ஆறு _________ **[விடை: யாங்சி]**
4. அங்கோர்வாட் _________ மன்னரால் கட்டப்பட்டது. **[விடை: இரண்டாம் சூரியவர்மன்]**
5. இங்கிலாந்தின் முதுகெலும்பு என அழைக்கப்படுவது _________ **[விடை: பென்னைன்ஸ்]**
6. _________ எரிமலை மத்திய தரைக்கடல் பகுதியில் கலங்கரை விளக்கம் என்றழைக்கப்படுகிறது. **[விடை: ஸ்ட்ரோம் போலி]**
7. _________ ஸ்பெயின் நாட்டின் உலகப் புகழ் பெற்ற விளையாட்டாகும். **[விடை: எருதுச் சண்டை]**

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திபெத் | - அ. | தீவுக் கூட்டம் |
| 2. | எவரெஸ்ட் சிகரம் | - ஆ. | மணற்பாங்கானது |
| 3. | இந்தோனேசியா | - இ. | அரிசிக் கிண்ணம் |
| 4. | ரூப-அல்-காலி | - ஈ. | 8848 மீ |
| 5. | ஆசியா | - உ. | மூன்றாம் துருவம் |

**[விடை: 1-உ, 2-ஈ, 3-அ, 4-ஆ, 5-இ]**

**IV. விடையளிக்கவும்.**

**1. ஆசியாவின் இயற்கை அமைப்பினை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்? அவை யாவை?**

விடை. ஆசியாவின் இயற்கை அமைப்பினை ஐந்து பிரிவுகளாக பிரிக்கலாம். அவை

1. வட தாழ்நிலங்கள்
2. மத்திய உயர்நிலங்கள்
3. தெற்கு பீடபூமிகள்
4. பெரும் சமவெளிகள்
5. தீவுக்கூட்டங்கள்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



**2. ஆசியாவில் உள்ளத் தீவுக்கூட்டங்களின் பெயர்களை எழுதுக.**

**விடை.** குரில், தைவான், சிங்கப்பூர், போர்னியோ, பிலிப்பைன்ஸ், ஜப்பான், இந்தோனேசியா, மாலத்தீவுகள், இலட்சத்தீவுகள், பஹ்ரைன் மற்றும் இலங்கைத் தீவு ஆகும்.

**3. ஆசியாவின் முக்கிய ஆறுகள் யாவை?**

**விடை.** ஆசியாவின் முக்கிய ஆறுகள் யாங்சி, ஹோவாங்கோ, மீகாங், எனிசி, ஓப், பிரம்மபுத்திரா, சிந்து அமூர், கங்கை மற்றும் ஐராவதி ஆகும்.

**4. முப்பள்ளத்தாக்கு நீர்த்தேக்கம் குறித்து எழுதுக.**

**விடை.** முப்பள்ளத்தாக்கு நீர்த்தேக்கமானது யாங்சி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இஃது உலகின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். இது சீனாவின் மின்சார தேவையில் 10% பூர்த்தி செய்கிறது.

**5. ஐரோப்பிய ஒன்றியம் பற்றி நீவிர் அறிவன யாவை?**

**விடை.** ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்பது 28 உறுப்பு நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் நலனுக்காக உருவாக்கப்பட்ட ஒரு குழுமம் ஆகும். இது தனக்கென ஒரு தனிக்கொடியும், பொதுவான நாணய (யூரோ) மதிப்பும் கொண்டது.

## V. வேறுபடுத்துக.

**1. ஆசியா மற்றும் ஐரோப்பா**

**விடை.**

| | ஆசியா | ஐரோப்பா |
|---|---|---|
| 1. | பரப்பு மற்றும் மக்கள் தொகை ஆகியவற்றின் அடிப்படையில் மிகப்பெரிய கண்டமாகும். | ஐரோப்பா பரப்பின் அடிப்படையில் மிகச் சிறியது. |
| 2. | இது கிழக்கு அரைக் கோளத்தில் அமைந்துள்ளது. | இது புவியின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. |

**2. கலப்பினக் காடுகள் மற்றும் புல்வெளிகள்**

**விடை.**

| | கலப்பினக் காடுகள் | புல்வெளிகள் |
|---|---|---|
| 1. | கலப்பினக் காடுகள் பிரான்சின் மேற்குப்பகுதி, பெல்ஜியம், டென்மார்க், பிரிட்டன் போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. | புல்வெளிகள் கிழக்கு ஐரோப்பாவில் காணப்படுகின்றன. |
| 2. | இக்காடுகளில் பிர்ச், பீச், பாப்லர், ஓக் மற்றும் மேபில் மரங்கள் வளரும். | இக்காடுகளில் சைப்ரஸ், கார்க், ஓக், ஆலிவ் மற்றும் செடார் மரங்கள் வளரும். |

**3. ஆசியா ஆறுகள் மற்றும் ஐரோப்பிய ஆறுகள்**

**விடை.**

| | ஆசியா ஆறுகள் | ஐரோப்பிய ஆறுகள் |
|---|---|---|
| 1. | ஆசியாவின் முக்கியமான ஆறுகள் ஓப், எனிசி, லேனா, சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, ஹோவாங்கோ, யாங்சி மற்றும் மீகாங் ஆகும். | ஐரோப்பாவின் முக்கியமான ஆறுகள் வோல்கா, டான்யூப், ரைன், ரோன், போ, தேம்ஸ் மற்றும் நீப்பர் ஆகும். |
| 2. | யாங்சி ஆறு ஆசியாவின் மிக நீளமான ஆறு ஆகும். | வோல்கா ஆறு ஐரோப்பாவின் மிக நீளமான ஆறு ஆகும். |

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0



**VI. விரிவான விடையளி :**

**1. ஆசியாவின் மத்திய உயர்நிலங்கள் பற்றி எழுதுக.**

விடை. 1. மத்திய உயர்நிலங்கள் துருக்கியிலிருந்து பேரிங் நீர்ச்சந்தி வரை விரிந்து காணப்படுகின்றன.

2. ஆசியாவில் இரு மலை முடிச்சுக்கள் காணப்படுகின்றன
அவை 1. பாமீர் முடிச்சு, 2. ஆர்மீனியன் முடிச்சு

3. இந்துகுஷ் மலைத்தொடர், சுலைமான் மலைத்தொடர், இமயமலைத்தொடர் மற்றும் டியான் ஷா மலைத்தொடர் பாமீர் முடிச்சிலிருந்து பரவிக் காணப்படுகின்றன.

4. எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இரண்டும் ஆர்மீனியன் முடிச்சில் ஒன்றிணைகிறது.

5. தாரஸ் மற்றும் போன்டைன் மலைத்தொடர்கள் ஆர்மீனியன் முடிச்சிலிருந்து பரவிக் காணப்படுகின்றன.

6. பெரிய கிங்கன், அல்டாய், வெர்கோயான்ஸ்க், அரக்கன்யோமா போன்றவை இங்குக் காணப்படும் முக்கிய மலைத்தொடர்கள் ஆகும்.

7. இமயமலைத் தொடர்களே உலகின் உயரமான மலைத்தொடர் ஆகும்.

8. ஆசியாவின் உயர்ந்த சிகரம் எவரெஸ்ட் சிகரம் (8848மீ) ஆசியாவில் மட்டுமின்றி உலகின் உயரமான சிகரம் இதுவே ஆகும்.

9. உலகின் தாழ்வான பகுதி ஆசியாவிலுள்ள சாக்கடலில் உள்ளது.

10. மலையிடைப் பீடபூமிகள் இம்மலைத் தொடர்களிடையே காணப்படுகின்றன. முக்கிய பீடபூமிகளாவன
    1. அனடோலிய பீடபூமி (போன்டைன்-டாரஸ் மலை)
    2. ஈரான் பீடபூமி (எல்ப்ர்ஸ்-ஜாக்ரோஸ்)
    3. திபெத்திய பீடபூமி (குன்லுன்-இமயமலை).

**2. ஆசியாவின் இருப்புப்பாதை போக்குவரத்தினைப் பற்றி விரிவாக எழுதவும்.**

விடை. **இருப்புப்பாதை போக்குவரத்து :**

1. உலகிலேயே நீண்ட இருப்புப்பாதை வழித்தடம் டிரான்ஸ்-சைபீரியன் இருப்புப்பாதை (9258 கி.மீ) ஆகும். அது கண்டம் கடக்கும் இருப்புப்பாதை போக்குவரத்து ஆகும்.
2. இது லெனின் கிரேட் மற்றும் விளாடிவோஸ்டாக் ஆகியவற்றை இணைக்கிறது.
3. டிரான்ஸ் ஆசியா இருப்புப்பாதை சிங்கப்பூரை துருக்கியிலுள்ள இஸ்தான்புல்லுடன் இணைக்கின்றது.
4. சின்கான்வென் எனப்படும் உலகப்புகழ் வாய்ந்த அதிவிரைவு புல்லட் இரயில் (352 கி.மீ/மணி) ஜப்பானிலுள்ள ஒசாகா மற்றும் டோக்கியோ இடையில் பயணிக்கின்றது.
5. ஆசியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய இருப்புப்பாதை போக்குவரத்து வலையமைப்பு இந்தியாவில் காணப்படுகிறது.

## அலகுத் தேர்வு

நேரம்: 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(3 × 1 = 3)**

**1. ஆசியாவின் மேற்கு எல்லையில் இல்லாதது எது?**

அ) கருங்கடல் ஆ) மத்திய தரைக்கடல்
இ) செங்கடல் ஈ) அரபிக்கடல்

**2. நிலநடுக்கோட்டுக் காலநிலை என்பது**

**i) ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும்.**
**ii) சராசரி மழையளவு 200மி.மீ ஆகும்.**
**iii) சராசரி வெப்பநிலை 10°C ஆகும்.**
**மேற்கண்ட கூற்றுகளில்**

அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி
இ) (i) மற்றும் (iii) சரி ஈ) (i) மற்றும் (ii) சரி

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



**3.** **ஆசியாவின் உயர்ந்த சிகரம் __________ஆகும்.**

அ) காட்வின் ஆஸ்டின் ஆ) எவரெஸ்ட் சிகரம்

இ) கஞ்சன்ஜங்கா ஈ) நீலகிரி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **(4 × 1 = 4)**

**1.** உலகின் மிக ஈரப்பதமான இடம் _____________.

**2.** உலகிலேயே ________ உற்பத்தியில் ஈரான் முன்னிலையில் உள்ளது.

**3.** ஆசியாவின் மிக நீளமான ஆறு ____________

**4.** __________ ஸ்பெயின் நாட்டின் உலகப் புகழ் பெற்ற விளையாட்டாகும்.

**III. பொருத்துக.** **(4 × 1 = 4)**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரிசிக் கிண்ணம் | - | அ) மூன்றாம் துருவம் |
| 2. | மௌசின்ராம் | - | ஆ) தீவுக் கூட்டம் |
| 3. | திபெத் | - | இ) அதிகமழை |
| 4. | இந்தோனேசியா | - | ஈ) தாய்லாந்து |

**IV. பொருந்தாத இணையைக் கண்டறிக.** **(1 × 1 = 1)**

அ) மெஸடா - ஸ்பெயின்

ஆ) ஜுரா - பிரான்ஸ்

இ) பென்னின்ஸ் - இத்தாலி

ஈ) கருங்காடுகள் - ஜெர்மனி

**V. சுருக்கமான விடையளி.** **(2 × 2 = 4)**

**1.** 'மான்சூன் காலநிலை' பற்றிச் சுருக்கமாக எழுதுக.

**2.** 'வேறுபாடுகளின் நிலம் ஆசியா' – நிரூபி.

**VI. வேறுபடுத்துக.** **(1 × 2 = 2)**

**1.** மலையிடைப் பீடபூமி மற்றும் தென் பீடபூமி.

**VII. காரணம் தருக.** **(1 × 2 = 2)**

**1.** ஆசியா, அரிசி உற்பத்தியில் முன்னணியில் உள்ளது.

**VIII. விரிவான விடை தருக.** **(1 × 5 = 5)**

**1.** பிளவுபட்ட கடற்கரை என்றால் என்ன? துறைமுகங்களை எவ்வாறு அது மோசமான காலநிலையில் இருந்து பாதுகாக்கின்றது?

## விடைகள்

**I.** **1.** ஈ) அரபிக்கடல் **2.** அ) (i) மட்டும் சரி **3.** ஆ) எவரெஸ்ட் சிகரம்

**II.** **1.** மௌசின்ராம் **2.** பேரீச்சம் பழங்கள் **3.** யாங்சி
**4.** எருதுச் சண்டை

**III.** 1 – ஈ, 2 – இ, 3 – அ, 4 – ஆ

**IV.** இ பென்னின்ஸ் – இத்தாலி

**V.** **1.** பார்க்க பாடப்புத்தக வினா எண் V-2
**2.** பார்க்க பாடப்புத்தக வினா எண் V-5

**VI.** **1.** பார்க்க பாடப்புத்தக வினா எண் VI-1

**VII.** **1.** பார்க்க பாடப்புத்தக வினா எண் VII-1

**VIII.** **1.** பார்க்க பாடப்புத்தக வினா எண் VIII- 3

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0

# குடிமையியல்

## அலகு 1

# மக்களாட்சி

### கற்றல் நோக்கங்கள்

- மக்களாட்சி என்பதன் பொருளை அறிதல்
- மக்களாட்சியின் வகைகளை அறிந்து கொள்ளல்
- நம் அரசமைப்புச் சட்டத்தின் கட்டமைப்பை அறிந்து வியத்தல்
- மக்களாட்சியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளல்



## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஆதிமனிதன் ___________ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினான்.**

அ) சமவெளிகள் ஆ) ஆற்றோரம்
இ) மலைகள் ஈ) குன்றுகள் **[விடை : ஆ) ஆற்றோரம்]**

**2. மக்களாட்சியின் பிறப்பிடம் ___________ .**

அ) சீனா ஆ) அமெரிக்கா
இ) கிரேக்கம் ஈ) ரோம் **[விடை : இ) கிரேக்கம்]**

**3. உலக மக்களாட்சி தினம் ___________ ஆகும்.**

அ) செப்டம்பர் 15 ஆ) அக்டோபர் 15
இ) நவம்பர் 15 ஈ) டிசம்பர் 15 **[விடை : அ) செப்டம்பர் 15]**

**4. நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் ___________ .**

அ) ஆண்கள் ஆ) பெண்கள்
இ) பிரதிநிதிகள் ஈ) வாக்காளர்கள் **[விடை : ஈ) வாக்காளர்கள்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நேரடி மக்களாட்சியைச் செயல்படுத்தும் நாடு ___________. **[விடை: சுவிட்சர்லாந்து]**
2. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் ___________ . **[விடை: ஆப்ரகாம் லிங்கன்]**
3. மக்கள் ___________ அளிப்பதன் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். **[விடை: வாக்குகள்]**
4. நம் நாட்டில் ___________ மக்களாட்சி செயல்படுகிறது. **[விடை: பிரதிநிதித்துவ]**



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



## III. விடையளிக்கவும்.

**1. மக்களாட்சி என்றால் என்ன?**

**விடை.** மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி எனப்படும்.

**2. மக்களாட்சியின் வகைகள் யாவை?**

**விடை.** மக்களாட்சி இரண்டு வகைப்படும். அவை,

1. நேரடி மக்களாட்சி (Direct Democracy)
2. பிரதிநிதித்துவ மக்களாட்சி (Reáesentative Democracy)

**3. நேரடி மக்களாட்சி - வரையறு.**

**விடை.** நேரடி மக்களாட்சி முறையில் மக்களே சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருப்பார்கள். அனைத்து சட்டத் திருத்தங்களையும் மக்கள் தான் அங்கீகரிப்பர். அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளின்படி ஆட்சி செய்பவர்.

**4. பிரதிநிதித்துவ மக்களாட்சி - வரையறு.**

**விடை.** மக்கள் நேரிடையாக தங்கள் உறுப்பினர்களை வாக்களித்து தேர்ந்தெடுக்கும் முறையே பிரதிநிதித்துவ மக்களாட்சி எனப்படும்.

**5. நம் அரசமைப்புச் சட்டத்தின் சிறப்புகளாக நீ புரிந்து கொள்வன யாவை?**

**விடை. அரசமைப்பு சட்டம் :**

1. சட்டம் ஒழுங்கை காப்பாற்றுகின்றன.
2. மக்கள் அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதிபெறும் உரிமையை உறுதி செய்துள்ளது.
3. அரசியல் கொள்கைகளை வரையறுக்கிறது.
4. அரசு நிறுவனங்களின் வடிவமைப்பு, வழிமுறைகள், அதிகாரம் மற்றும் கடமைகளை விளக்குகிறது.
5. குடிமக்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்துள்ளது.

## IV. உயர்சிந்தனை வினா.

**நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி - ஒப்பீடு செய்து, வேறுபாடுகளை அறியவும்.**

**விடை.**

| | நேரடி மக்களாட்சி | பிரதிநிதித்துவ மக்களாட்சி |
|---|---|---|
| 1. | மக்கள் நேரடியாக ஆட்சி முறையில் பங்கேற்பர். | மக்கள் நேரடியாக பங்கு பெறுவதை விடுத்து தங்கள் பிரதிநிதிகள் மூலம் பங்கு பெறுகின்றனர். |
| 2. | பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமானிய நாகரிகத்தில் நடைபெற்று வந்தது. | மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர். |
| 3. | பண்டைய இந்தியாவில், கிராம பஞ்சாயத்து முறையில் நேரடி மக்களாட்சி நடைபெற்றன. | பெரும்பாலான நாடுகளில் மறைமுக மக்களாட்சி முறை பின்பற்றப்படுகிறது. அரசியல் கட்சிகள் ஆட்சிமுறையில் பெரும் பங்கு வகிக்கின்றன. |

## V. செயல்பாடுகள்.

**1. மக்களாட்சி முறையின் நிறை, குறைகளை விவாதிக்கவும்.**

**விடை. மக்களாட்சியின் நிறைகள் :**

1. மக்களாட்சி சிறந்த அரசாங்கம் அமைய வழி ஏற்படுத்துகிறது.
2. மக்கள் உரிமைகளுக்கு பாதுகாப்புக் கிடைக்கிறது.
3. சமத்துவம் நிலைநாட்டப்படுகிறது. மக்கள் கல்வியறிவு பெற உதவுகிறது.
4. நாட்டுநலன் மேம்படுகிறது. அமைதியான முறையில் அரசாங்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது.
5. ஜனநாயகம் போர் ஆயுதங்களை நம்பாமல் வாக்குப் பெட்டியை நம்புகிறது.
6. ஜனநாயக ஆட்சி முறையில் புரட்சிகள் மற்றும் கிளர்ச்சிகளுக்கு இடமில்லை.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



**மக்களாட்சியின் குறைகள்:**

1. மக்களாட்சி சில சமயங்களில் பெரும்பான்மையினரின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது.
2. அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சி உறுப்பினர்கள் அரசாங்க பதவியில் இருப்பவர்களையும், பொது மக்களையும் கட்டுப்படுத்துகின்றனர்.
3. மக்களாட்சி தனிமனிதனின் கருத்துகளை ஊக்கப்படுத்துவதில்லை.
4. மக்களாட்சி அதிக செலவினங்களை கொண்ட அரசாங்கத்தைக் கொண்டுள்ளது.
5. மக்களாட்சியில் கையூட்டுகளையும், அதிகாரிகளின் சட்ட மீறல்களையும் தடுக்க முடிவதில்லை.
6. மக்களாட்சி அரசாங்கத்தில் புதியவர்கள் சாதாரண மக்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும் போக்கை ஏற்படுத்துகிறது.

## பாடப்பகுதி உள்வினா

**1. நேரடி மக்களாட்சி முறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்த இயலுமா?**

**விடை.** இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. நேரடி மக்களாட்சியில் மக்களே சட்டங்களை உருவாக்குகின்றனர். அனைத்து சட்டத் திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர். அதற்குத் தேவையான கல்வியறிவை மக்கள் பெற்றிருக்கவில்லை. எனவே நேரடி மக்களாட்சி முறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்த இயலாது.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. _________ அரசமைப்புச் சட்டம் தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப் பெரியது.**

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்க இ) சுவிட்சர்லாந்து ஈ) இந்திய

**[விடை: (ஈ) இந்தியா]**

**2. இந்தியாவில் ___________ வயது நிரம்பிய எந்த ஒரு குடிமகனும் வாக்களிக்கலாம்.**

அ) 18 ஆ) 25 இ) 21 ஈ) 15

**[விடை: (அ) 18]**

**3. உலகின் பழமையான மக்களாட்சி நாடுகள் __________ .**

அ) கிரேக்கம், ரோமானியப் பேரரசு, ஐஸ்லாந்து ஆ) கனடா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து
இ) கனடா, கிரேக்கம், ஆஸ்திரேலியா ஈ) ஆப்பிரிக்கா, பாரீஸ், ரஷ்யா

**[விடை: (அ) கிரேக்கம், ரோமானியப் பேரரசு, ஐஸ்லாந்து]**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மக்களாட்சி அமைப்பில் குறிப்பிடத்தகுந்த அளவு அதிகாரம் _____ இடம் உள்ளது. **[விடை: மக்கள்]**
2. அதிபர் மக்களாட்சி நடைபெறும் நாடுகள் __________ மற்றும் _______.
**[விடை: அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மற்றும் கனடா]**
3. நாடாளுமன்ற மக்களாட்சி நடைபெறும் நாடுகள் ________ மற்றும் _______.
**[விடை: இந்தியா, இங்கிலாந்து]**
4. இந்திய அரசமைப்பு சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுபவர் _______.
**[விடை: டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்]**

### III. விடையளிக்கவும்

**1. ஜனநாயக ரீதியாக முடிவெடுப்பது என்றால் என்ன?**

**விடை.** மக்களாட்சி அமைப்புகளில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைவரிடம் இருக்காது. மாறாக அவ்வதிகாரம் ஒரு குழுவிடம் தான் இருக்கும். இக்குழு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு வெளிப்படையான உரையாடல்களை வைத்து ஒருமித்த கருத்து ஏற்பட்டவுடன் இறுதி முடிவை எடுக்கும். இதைத்தான் ஜனநாயக ரீதியாக முடிவெடுத்தல் என்கிறோம்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



**2. மக்களாட்சியின் நோக்கம் என்ன?**

விடை. 1. மக்களாட்சி அமைப்பின் அதிகாரம் மக்களிடம் இருக்கும்.

2. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.

3. மக்களாட்சி அரசில் 18 வயது நிறைவுற்ற அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களுக்கான பிரதிநிதியை தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

**3. இந்தியாவில் வாக்குரிமை மற்றும் போட்டியிடும் உரிமை பற்றி எழுதுக.**

விடை. 1. இந்தியாவில் 18 வயது நிரம்பியவர்கள் தேர்தல்களில் வாக்களிக்க உரிமையுள்ளவர்கள் ஆவர்.

2. 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் தேர்தலில் போட்டியிடும் உரிமையைப் பெறுகிறார்கள்.

## அலகுத் தேர்வு

நேரம்: 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 20

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (4 × 1 = 4)**

**1. ஆதிமனிதன் ___________ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினான்.**

அ) சமவெளிகள் ஆ) ஆற்றோரம் இ) மலைகள் ஈ) குன்றுகள்

**2. உலக மக்களாட்சி தினம் ___________ ஆகும்.**

அ) செப்டம்பர் 15 ஆ) அக்டோபர் 15 இ) நவம்பர் 15 ஈ) டிசம்பர் 15

**3. இந்தியாவில் ___________ வயது நிரம்பிய எந்த ஒரு குடிமகனும் வாக்களிக்கலாம்.**

அ) 18 ஆ) 25 இ) 21 ஈ) 15

**4. உலகின் பழமையான மக்களாட்சி நாடுகள் ___________ .**

அ) கிரேக்கம், ரோமானியப் பேரரசு, ஐஸ்லாந்து ஆ) கனடா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து

இ) கனடா, கிரேக்கம், ஆஸ்திரேலியா ஈ) ஆப்பிரிக்கா, பாரீஸ், ரஷ்யா

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. (4 × 1 = 4)**

1. மக்களாட்சி அமைப்பில் குறிப்பிடத்தகுந்த அளவு அதிகாரம் _____ இடம் உள்ளது.
2. அதிபர் மக்களாட்சி நடைபெறும் நாடுகள் __________ மற்றும் _______.
3. நாடாளுமன்ற மக்களாட்சி நடைபெறும் நாடுகள் ________ மற்றும் _______.
4. இந்திய அரசமைப்பு சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுபவர் _____

**III. குறுகிய விடை தருக. (4 × 2 = 8)**

1. மக்களாட்சி என்றால் என்ன?
2. பிரதிநிதித்துவ மக்களாட்சி – வரையறு.
3. மக்களாட்சியின் நோக்கம் என்ன?
4. இந்தியாவில் வாக்குரிமை மற்றும் போட்டியிடும் உரிமை பற்றி எழுதுக.

**IV. விரிவான விடை தருக. (1 × 4 = 4)**

1. நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி – ஒப்பீடு செய்து, வேறுபாடுகளை அறியவும்.

## விடைகள்

**I.** 1. ஆ) ஆற்றோரம் 2. அ) செப்டம்பர் 15
3. அ) 18 4. அ) கிரேக்கம், ரோமானியப் பேரரசு, ஐஸ்லாந்து

**II.** 1. மக்கள் 2. அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மற்றும் கனடா
3. இந்தியா, இங்கிலாந்து 4. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

**III.** 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் III-1
2. பார்க்க பாடப்புத்தக வினா எண் III-4
3. பார்க்க கூடுதல் வினா எண் III-2
4. பார்க்க கூடுதல் வினா எண் III-3

**IV.** 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் IV

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

6 ஆம் வகுப்பு

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA) - 2022

## சமூக அறிவியல்

தேர்வு எண்

நேரம் : 2.30 மணி] வினாத்தாள் (விடைகளுடன்) [மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுது.** $5 \times 1 = 5$

1. பாண்டியர் ஆட்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் .................... ஆவர்.
   (அ) சாதவாகனர்கள் (ஆ) சோழர்கள்
   (இ) களப்பிரர்கள்
   (ஈ) பல்லவர்கள்
2. சந்திரகுப்தரால் நிறுவப்பட்ட ஒற்றை இரும்புத்தூண் .................... என்ற இடத்தில் உள்ளது.
   (அ) மெக்ராலி (ஆ) பிதாரி
   (இ) கத்வா (ஈ) மதுரா
3. மாநகராட்சியின் தலைவர் .................... என அழைக்கப்படுகிறார்.
   (அ) மேயர் (ஆ) கமிஷனர்
   (இ) பெருந்தலைவர் (ஈ) தலைவர்
4. புவியின் வடிவம் .................... .
   (அ) சதுரம் (ஆ) செவ்வகம்
   (இ) ஜியாய்டு (ஈ) வட்டம்
5. தீர்க்கக் கோடுகளின் மொத்த எண்ணிக்கை .................... .
   (அ) 370 (ஆ) 380
   (இ) 360 (ஈ) 390

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** $4 \times 1 = 4$

6. காவிரியாற்றின் குறுக்கே கல்லணையை .................. கட்டினார்.
7. குஷானர்களின் பிந்தைய தலைநகரம் .................. ஆகும்.
8. முதன்மை தீர்க்கக் கோடு .................. என அழைக்கப்படுகிறது.
9. தமிழ்நாட்டில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட நகராட்சி .............. ஆகும்.

**III. பொருத்துக.** $5 \times 1 = 5$

| | | | |
|---|---|---|---|
| 10. | நெய்தல் | – | ஹர்ஷசரிதம் |
| 11. | பாணர் | – | 10,000 மாணவர்கள் |
| 12. | நாளந்தா பல்கலைக்கழகம் | – | சுனாமி |
| 13. | பேரிடர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| 14. | ஊராட்சி ஒன்றியம் | – | மீன் பிடித்தல் |

**IV. சரியா / தவறா?** $3 \times 1 = 3$

15. சாதிமுறை சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றது.
16. "புத்தசரிதம்" அஸ்வகோஷரால் எழுதப்பட்டது.
17. தன்வந்திரி மருத்துவத்துறையில் ஒரு புகழ்பெற்ற அறிஞராக திகழ்ந்தார்.

**V. பொருந்தாததை வட்டமிடுக.** $3 \times 1 = 3$

18. வடதுருவம், தென்துருவம், நிலநடுக்கோடு, பன்னாட்டு தேதிக் கோடு.
19. வெப்ப மண்டலம், நேர மண்டலம், மிதவெப்ப மண்டலம், குளிர்மண்டலம்.
20. மகரரேகை, கடகரேகை, நிலநடுக்கோடு, முதன்மை தீர்க்கக் கோடு.

**VI. சுருக்கமாக விடையளி: (ஏதேனும் 7)** $7 \times 2 = 14$

21. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து திணைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
22. கடையெழு வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
23. கனிஷ்கரின் அவையை அலங்கரித்த துறவிகள் அறிஞர்கள் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக.
24. நாளந்தா பல்கலைக்கழகத்தில் கற்றுத் தரப்பட்ட பாடப்பிரிவுகள் யாவை?
25. ஹர்ஷர் எழுதிய நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
26. ஜியாய்டு என்பது என்ன?
27. தலநேரம் என்பது என்ன?
28. புவியில் காணப்படும் நான்கு அரைக் கோளங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
29. பேரிடரின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுத் தருக.
30. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் யாவை?

**VII. விரிவான விடையளி: (ஏதேனும் 4)** $4 \times 5 = 20$

31. சங்க காலத்தில் பெண்களின் நிலை குறித்து விவரி.
32. காந்தாரக் கலைப் பள்ளியின் முக்கியத்துவத்தை விவரி.



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



33. சமுத்திரகுப்தரின் படையெடுப்புகள் குறித்து எழுதுக.
34. முக்கிய அட்சக் கோடுகள் யாவை? அவற்றின் இடையே காணப்படும் மண்டலங்கள் பற்றி எழுது.
35. மாநகராட்சியின் பணிகள் சிலவற்றைப் பட்டியலிடுக.
36. சாலை பாதுகாப்பு குறித்த முழக்கங்களை எழுதுக.

VIII. **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும். (ஏதேனும் 6)** $6 \times 1 = 6$

1. ஆசியா
2. ஆப்பிரிக்கா
3. நிலநடுக்கோடு
4. ஆஸ்திரேலியா
5. கிரீன்விச் தீர்க்க கோடு
6. பசிபிக் பெருங்கடல்
7. அட்லாண்டிக் பெருங்கடல்
8. கடக ரேகை
9. இந்தியப் பெருங்கடல்

## விடைகள்

I.

1. (இ) களப்பிரர்கள்
2. (அ) மெஃராலி
3. (அ) மேயர்
4. (இ) ஜியாய்டு
5. (இ) 360

II.

6. கரிகாலன்
7. பெஷாவர் (புருஷபுரம்)
8. கிரீன்விச் தீர்க்கக்கோடு
9. வாலாஜாபேட்டை

III.

10. நெய்தல் – மீன் பிடித்தல்
11. பாணர் – ஹர்ஷசரிதம்
12. நாளந்தா பல்கலைக்கழகம் – 10,000 மாணவர்கள்
13. பேரிடர் – சுனாமி
14. ஊராட்சி ஒன்றியம் – வட்டார வளர்ச்சி அலுவலர்

IV.

15. தவறு
16. சரி
17. சரி

V.

18. பன்னாட்டு தேதிக் கோடு
19. நேர மண்டலம்
20. முதன்மை தீர்க்கக் கோடு

VI.

21. 1. குறிஞ்சி, 2. முல்லை, 3. மருதம், 4. நெய்தல், 5. பாலை.
22. 1. பாரி 2. காரி 3. ஓரி 4. பேகன் 5. ஆய் 6. அதியமான் 7. நள்ளி
23. அஸ்வகோஷர், வசுமித்ரர், நாகார்ஜுனா போன்றோர் கனிஷ்கரின் அவையை அலங்கரித்த அறிஞர்கள் ஆவர்.
24. பௌத்தத் தத்துவம், யோகா, வேத இலக்கியங்கள், மருத்துவம் போன்ற பாடப்பிரிவுகள் நாளந்தா பல்கலைக் கழகத்தில் கற்றுத்தரப்பட்டன.
25. 1. ரத்னாவளி 2. நாகநந்தா 3. பிரியதர்சிகா
26. புவியானது துருவப் பகுதிகளில் தட்டையாகவும், நிலநடுக்கோட்டுப் பகுதியில் சற்றுப் பருத்தும், கோள வடிவமாக காணப்படுகிறது. ஆனாலும், புவியின் வடிவத்தை எந்த வடிவியல் உருவத்துடனும் ஒப்பிட முடியாது. எனவே, இதன் வடிவம் புவி வடிவம் (ஜியாய்டு) என்று அழைக்கப்படுகிறது.
27. ஒவ்வொரு தீர்க்கக் கோட்டிற்கும் நேராக சூரியன் உச்சியில் வரும் பொழுது அக்கோட்டிலுள்ள எல்லா இடங்களிலும் நேரம் நண்பகல் 12 மணி, இதுவே தலநேரம் எனப்படும்.
28. புவியில் காணப்படும் நான்கு அரைக்கோளங்கள்
    1. வட அரைக்கோளம்.
    2. தென் அரைக்கோளம்
    3. கிழக்கு அரைக்கோளம் மற்றும்
    4. மேற்கு அரைக்கோளம்
29. இயற்கை பேரிடர் மற்றும் மனிதனால் உண்டாகும் பேரிடர்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பேரிடரைப் பிரிக்கலாம்.

    **இயற்கைப் பேரிடர் :** நிலநடுக்கம், எரிமலை, சுனாமி, சூறாவளி, வெள்ளம், நிலச்சரிவு, பனிச்சரிவு, இடி மற்றும் மின்னல் போன்றவை இயற்கை பேரிடர்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com